கிறது. சமத்துவம் இல்லாத நிலை இருக்கிறது. இதைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—கான்வென்ட் போன்ற ஆடம்பரமான பள்ளிகளை, லக்ஸரி ஸ்கூல்ஸ் என்று சொல்லத்தக்க அளவிற்கு இருக்கக்கூடிய பள்ளிகளையெல்லாம் ஒழித்துவிட்டு, இந்தத் தேசத்திலே ஏற்றத் தாழ்வற்ற நிலையில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வகை செய்யவேண்டும். இந்தத் தேசத்திலே சாதாரண விவசாயி, தொழிலாளி ஆகியவர்களுடைய குழந்தைகள் எந்தப் பள்ளிகளுக்குச் சென்று படிக்கிறார்களோ, அதே பள்ளிகளில்தான் தொழில் அதிபர்களுடைய பிள்ளைகளானாலும் சரி, மந்திரிகளுடைய பிள்ளைகளானாலும் சரி, மிராசுதார்களுடைய பிள்ளைகளானாலும் சரி, படிக்கக்கூடிய அளவிற்குக் கல்வியிலே சமத்துவத்தைப் புகட்ட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். பி.ப. 1–30

மற்றும், இங்கே சம்பள உயர்வுபற்றி எல்லாம் பேசப்பட்டபோது, ஆரம்ப ஆசிரியர்கள் கல்வித் துறையிலே மிக உயர்ந்த நிலையில் வைக்கப்படவில்லை. இந்தத் தேசத்தில் எந்தத் துறையில் பார்த்தாலும் தனி மனிதன் வருமானம் ஏற்றத் தாழ்வு உடையதாகவே இருக்கிறது. சர்க்கார் அதிகாரிகளுடைய வருமானம், துறைத் தலைவர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வு மிகமிக அதிகமாக இருக்கிறது. சர்வகலாசாலையிலே இருக்கும் தலைவருக்கு 2 ஆயிரம் ரூபாய்க்கும் அதிக பட்சம் இருக்கும். ஆனால் ஆரம்ப ஆசிரியர்களுடைய சம்பளம் 100-க்கும் குறைச்சலாக இருக்கிறது. இதன் காரணமாக கல்வியிலும் ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. ஆரம்ப ஆசிரியர்கள் குறைந்த கீழ்நிலையிலே இருப்பதால் கல்வியின் தரம் குறைந்து விடுகிறது. இந்தத் துறையிலே அரசு கவனம் செலுத்தி வர வேண்டும். மேலே இருக்கக் கூடியவர்களின் சம்பளத்தைப் பாராமல் கீழே இருக்கக் கூடியவர்களின் சம்பளத்தை மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . . . (மணியடிக்கப்பட்டது.)

4. அமைச்சரின் அறிக்கை

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுதல்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப்பேரவை விதிகளின் 82 (1) பிரிவின் கீழ் சபாநாயகர் அனுமதி பெற்று, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த ஓர் அறிவிப்பைத் தருவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்தைப் பாசனத்திற்குத் திறந்து விடுவதுபற்றி அரசு பரிசீலித்துள்ளது. சென்ற மூன்று நாட்களாக காவிரி நீர்வரத்துப் பகுதியில் சற்று நல்ல மழை பெய்துள்ளது. 29–6–1967 மெர்க்காராவில் 130 மி.மீட்டர். 30–6–1967 அன்று மெர்க்காராவில் 130 மி.மீட்டர். இன்று 53 மி. மீட்டர் மழை. "கபினி" ஆற்று வரத்தும் 29,000 கியூசெக்ஸ் வரை உயர்ந்துள்ளது. இந்த நிலை இன்னும் ஓரிரு நாட்களுக்கு நீடிக்கும். நீர்வரத்துப் பகுதிகளில் மழையும் சற்று குறைந்தாலும் 50 மி. மீட்டர் வரை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டூர் இன்றைய நீர்மட்ட உயரம் 47·4 அடியாக இருக்கிறதெனினும், மேற்கண்ட காரணங்களினால் விரைவில் உயரும். குறைந்தது ஒரு மாத காலத்திற்காவது தொடர்ந்து காவிரிப் பாசனத்துக்கு நாற்று பாவுவதற்கும், பயிருக்கும் தேவையான தண்ணீர் வழங்க முடியும் என்று பொறியியல் தலைமையினர் கருதுகின்றனர். இதற்குள் மேல் பருவ மழையும் வரத்தும் எதிர்பார்க்கலாம். எனவே, 3–7–1967 மாலை 6 மணியிலிருந்து மேட்டூரில் இருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. தண்ணீர் கல்லணைக்கு 7–7–1967 வாக்கில் போய்ச் சேரும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : சபையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் மாலை 3 மணிக்குத் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.